# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி பகுதி - I (மதிப்பெண்கள்: 15) மதிப்பெண்கள் : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

1. மொழி ஞாயிறு என்றழைக்கப்படுபவர் ______.
   அ) இளம்பூரணர் ஆ) தேவநேயப்பாவாணர்
   இ) கம்பர் ஈ) இளங்குமரனார்
2. உம்மைத் தொகையைத் தேர்ந்தெடு.
   அ) சாரைப்பாம்பு ஆ) தேர்ப்பாகன்
   இ) வீசு தென்றல் ஈ) அண்ணன் தம்பி
3. இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் ______ எனப்படும்.
   அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) பால் வழுவமைதி
4. 'பூ'-வின் தோற்ற நிலையைக் குறிப்பது
   அ) அரும்பு ஆ) போது இ) செம்மல் ஈ) வீ
5. மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ? என வருணிக்கப்பட்டவர்
   அ) குகன் ஆ) இராமன் இ) சீதை ஈ) இலக்குமணன்
6. ஏறுகோட்பறை ______ என்னும் நிலத்திற்குரிய பறை ஆகும்.
   அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) முல்லை ஈ) நெய்தல்
7. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
8. புறத்திணைகளின் வகைகள் ______.
   அ) 10 ஆ) 8 இ) 6 ஈ) 12
9. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
   இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி
10. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ______ வேண்டினார்.
    அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
    இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக
11. "இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும்" ... இவ்வடிகளில் கற்காலம் என்பது
    அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

*பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.*

செந்தீச் சுடரிய ஊழியும் : பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் : அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர் தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும் .....

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
    அ) பெரிய திருமொழி ஆ) திருப்பாவை இ) பரிபாடல் ஈ) சிலப்பதிகாரம்
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
    அ) பெரியாழ்வார் ஆ) கீரந்தையார் இ) செய்குதம்பிப் பாவலர் ஈ) கண்ணதாசன்

CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14. 'பீடு' என்ற சொல்லின் பொருள் என்ன?
அ) மழை ஆ) சிறப்பு இ) முறை ஈ) வானம்

15. பாடலில் பயின்றுவரும் அடி எதுகையை எழுதுக.
அ) தண்பெயல், மீண்டும் ஆ) உள்முறை, உயர்வு
இ) உள்ளீடு, பீடு ஈ) அவையிற்று, ஆர்தருபு

பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4 x 2 = 8
(21வது வினா கட்டாய வினா)

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் பெற்றுள்ளது.
ஆ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.

17. செய்குத் தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடராக்குக.

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக.

19. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

20. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

21. 'குன்றேறி' எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

23. ***இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.***
அ) கொடு - கோடு ஆ) இயற்கை - செயற்கை

24. ***ஊர்ப்பெயர்களில் மரூஉவை எழுதவும்.***
அ) புதுச்சேரி ஆ) தஞ்சாவூர்

25. ***கலைச்சொற்கள் தருக :***
அ) Revivalism ஆ) Consonant

26. ***பழமொழிகளை நிறைவு செய்க :***
அ) ஒரு பானை ________.
ஆ) அளவுக்கு ________.

27. மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

28. மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப்பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com
CamScanner
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

*வினாக்கள்:*

1. அடுக்குத் தொடர்களை எடுத்து எழுது.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

31. நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.

பிரிவு - 2

2x3=6

**இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**(வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது"
- இடஞ்சுட்டிப் பொருள் தருக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்கு.

34. *அடிபிறழாமல் எழுதுக :*
அ) "வாளால் அறுத்து" - எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல்.
ஆ) "மாற்றம் எனது" - எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

பிரிவு - 3

2x3=6

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

35. தோட்டத்தில் மல்லிகைப் பூப்பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
*இப்பத்தியிலுள்ள தொகைநிலைத்தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.*

36. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை விளக்கி, மூவகை தீவக அணிகளையும் குறிப்பிடு.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

5x5=25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

38. அ) கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலைகள் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கட்டுரை / கதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

CS CamScanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. காட்சியைக் கண்டு கவிநயம் எழுதுக.



41. கதவு எண் 66, திருவள்ளுவர் தெரு, திருச்சி என்ற முகவரியில் வசிக்கும் மாணிக்கம் என்பவரின் மகன் அறிவழகன் என்பவர் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்ள பயிற்சி பெற விளையாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேர விரும்புகிறார். உரிய படிவத்தை நிரப்புக.

42. அ) மாணவர் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும், அதனால் ஏற்படும் நன்மைகள் ஐந்தினையும் எழுதுக.

*(அல்லது)*

ஆ) ***மொழிபெயர்க்க:***

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 8 = 24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி விவரிக்கவும்.

*(அல்லது)*

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை, இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

44. அ) "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

*(அல்லது)*

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

*******

www.Padasalai.Net
CS CamScanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com